https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# அம்பையின் பெண்ணியச் சிந்தனைகள்

**பா. பிரித்தியா**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் 608 002

**முனைவர் செ. கவிதா**
உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் 608 002

## முன்னுரை

பெண்ணியம் என்பது பெண்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு புதிய இயக்கமாகும், அதோடு பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் பெண் ஆணுக்குச் சமமானவள் என்னும் உயர்நெறியை நிலைநாட்டும் நோக்கத்தை கருவாகக் கொண்டு இயங்குகிறது. தங்களின் வாழ்க்கை முறைகளையும், எதிர்காலத்தையும் தாங்களே சுதந்திரத்துடன் நிர்ணயித்துக் கொள்ளுதல், ஆணுக்கு இணையாகச் சம உரிமை கோரிவரும் சமுதாய இயக்கமாகும். பெண்ணை மகளாக, காதலியாக, மனைவியாக தாயாக இப்படிப் பல நிலைகளில் அவர் தன் அவஸ்தைகளைத் தன் சிறுகதைகளில் அழகாகவும் உறுதியுடன் தெள்ளத் தெளிவுடன் முன் வைக்கிறார் அம்பை.

## பெண்ணியச் சிந்தனை

பெண்ணியச் சிந்தனை என்பது பெண்களின் உரிமைக்களுக்காகவும், சமத்துவத்துக்காகவும், சமூகத்தில் நிலவும் பாலின வேறுபாடுகளை எதிர்த்துப் போராடுவதற்காகவும் பெண்களின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் எழுபப்படும் சிந்தனைகள் மற்றும் செயல்களின் தொகுப்பாகும்.

சங்க காலப் புலவர்களில் பலர் பெண்பால் புலவர்கள் வாழ்ந்துள்ளனர் ஔவையார் அவர்கள் புகழ்பெற்றவர். பின்னர் தோன்றிய பக்தி இலக்கிய காலத்திலும் பல பெண் கவிகள் இறையை பற்றி பாடி இருக்கின்றனர். இவ்வாறு சங்க கால முதலே பெண்ணிய சிந்தனையானது இருந்திருக்கின்றயுது. அறத்தின் பொறுப்பை பெண்கள் மேல் ஏற்றி விட்டு தப்பித்துக் கொள்ளும் வழியே காலம் காலமாக செய்திருக்கின்றனர்.

> "பெருமையுள் வீரமும் ஆணுக் குறியதாகவும்
> அச்சம் மடம் நாணம் பெண்ணுக்குரியதாகவும்"[1]

இவ்வாறு பெண்ணுக்கெதிரான சிந்தனைகளை எதிர்த்து அதனை மாற்ற விரும்புவதே பெண்ணியம் எனும் கருத்தாக உள்ளது இக்கருத்தை பலர் கூறியுள்ளனர், ஔவையார் முதல் தற்போது வரை அதனை எதிர்த்து தங்களது எழுத்தாற்றல் மூலம் வெளிப்படுத்தி இருக்கின்றனர் அவ்வாறு உள்ள பெண்ணியவாதியில் ஒருவர் அம்பை ஆவார்.

## பெண் அடிமைத்தனம்

ஆண்கள் ஒவ்வொருவரும் பெண்ணை தெய்வமாக தாயாக சகோதரியாக மகளாக

நினைக்கும் போது மிகவும் பெருமையாக இருக்கிறது. ஆனால் மனைவி என்ற நிலையில் தனது சுயநலத்திற்காக அவளை வேறு விதமாக விதிகளுக்குள்ளும் கட்டுப் பாட்டுக்குள்ளும் முடக்குகின்றனர் இதனையே பாரதி *"பெண்டாட்டிதனையடி மைப் படுத்த வேண்டி பெண் குலத்தை முழுதடிமைப்படுத்தலாமோ"* என்று கூறுகிறார். இன்றைய காலகட்டத்தில் பெண்கள் கல்வி பொருளாதாரம் வேலை வாய்ப்பு பேருந்து புகை வண்டிவானூர்தி போன்ற துறைகளில் சிறந்து விளங்கி போற்றப்பட்டாலும் தான் தனது குடும்ப வாழ்க்கையில் அடிமைப்படுத்தப்படுகின்ற னர் என்பதை அம்பை அவர்களின் *"சிறகுகள் முறியும் சிறுகதை"*[2] மூலம் வெளிப்படுத்தி யுள்ளார்.

சாரதாவை பெண்பார்க்க வரும் போது பாஸ்கரன் வயதில் பெரியவனாகவும் உடல் பருமன் உடையவனாகவும் இருக்கிறான் என்று அவள் கூற அதற்கு மாமா பருமனாக இருப்பது ஆரோக்கியமாக இருப்பது போன்றது. என்று கூற அதை ஏற்றுக் கொண்டவள் வாழ்க்கையில் பெரும் ஏமாற்றத்தை நிகழ்த்தியது. அவள் தினமும் காலையில் எழுந்து அவனுக்காக சமையல் செய்து ஆபிஸ்க்கு போகும் போது கொடுத்து அனுப்புவாள். இவனும் அவள் மேல் உள்ள அன்பால் வாங்கிச் செல்கிறான் என்று எண்ணினால் ஆனால் அதற்குப் பின்தான் அவன் கூறினான்.

*"நீ நன்னாத்தான் சமைக்கிற சாமானை வீணாக்குற இருந்தாலும் ஹோட்டலில் சாப்பிடுவதை விட இது மேல"*[3] என்றான் இதனால் சாரதா மனமுடைந்தால் அவன் அவளை ஒரு பொருட்டாகவே நினையாது அவளை வீட்டில் வேலைக்காரி போல் வைத்திருப்பதே ஆசிரியரின் கருத்தின் மூலம் அறியலாம்.

அம்பை தனது படைப்புகளில் பெண்ணியக் கருத்துக்களை வெளிப்படையாகவே வெளிப் படுத்துகிறார். இக்கதையில் சாரதா பாஸ்கரன் மீது கோபம் கொண்டு "ஒதுங்கிப் போகும் பெண் நாயை பார்த்து உறுமும் ஆண் நாயின் உறுமலில் கூட ஒரு பெண்மை இருக்கும்" என்று கூறும் கருத்தானது மனைவியை தேவைக்கு மட்டும் பயன் படுத்தும் ஆண்களுக்கான ஒரு சிறந்த பதிலாகவே வெளிப்படுத்துகின்றார்.

இல்லறம் என்பது ஆணும் பெண்ணும் சமமாக இணைந்து வாழ்வை நடத்துவதே அதனால் அதில் தவறு இருப்பின் அதனை ஆசிரியர் சாரா வாழ்க்கையில் மூலம் "மென்மையில்லாத ஆண்களுக்கு குழந்தை பிறக்கக் கூடாது" என கூறுவது அறியலாம்.

## சமுதாயத்தில் பெண்களின் நிலை

சமுதாய மறுமலர்ச்சிக்குப் பெண்களிடையே மன வளர்ச்சியும், மனமாறுதலும் தேவை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீட்டை விட்டு வெளியே வரவே அச்சப் பட்ட பெண்கள் இருபதாம் நூற்றாண்டின் இடையில் ஏற்பட்ட போரட்டத்தில் கலந்து கொள்ள முற்பட்டவுடன் ஒரளவு துணிவு பெற்றது. இன்று பெண்கள் தனித்து நின்று நிறுவனங்களை நடத்தவும் நாட்டை ஆளவும் திறமை பெற்றிருக்கின்றனர். மேலும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகின்றார். ஆயினும் தன் செயல் திறமையை விட கணவனின் செயல் திறமையே பெருமை என்று தன் இயல்பை மறந்து தனக்கு ஏற்படும் பிரச்சனைகளை எதிர்கொள்ளத் தயங்குகின் றனர். தனக்கான முடிவுகளை தானே எடுக்க முடியாத நிலையில் உள்ளனர். அதோடு வீட்டின் நான்குச் சுவர்களுக்குள் தான் நம்முடைய உலகம் என்று கருதி முடங்கிக் கிடக்கின்றனர். வீட்டைவிட்டு வெளியே சென்றால் சமூகம் அவர்களை வேறு கண்ணோட்டத்திலேயே பார்க்கிறது எனலாம். அன்றைய காலங்களில் பெண்கள் வீட்டை விட்டு செல்ல வேண்டுமானால் ஒன்று திருமணம் முடிந்து செல்வது மற்றொன்று கல்விக்காக செல்வது அதுவும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களுக்கு மட்டுமே இந்த வாய்ப்பு. மற்ற பெண்கள் வெளியில் செல்வது இல்லை என்றே கூறலாம். பல காலங்களாகவே தொடர்ந்து வரும் பழக்கவழக்கங்களில் இதுவும் ஒன்றாக மாறி விட்டது.

நம் சமுதாயத்தில் பெண்ணாக பிறந்து எதை செய்தாலும் அதற்கு ஒரு கட்டுப்பாட்டை முன் வைப்பதோடு இது நம் பழக்க வழக்கங்களில் இல்லை என்று செய்யும் முன்னே தடை விதிக்கின்றன. இன்றும் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வராமல் வெளியுலகம் அறியாமலே இருக்கின்றனர் மறுக்க முடியாது. என்பதை *"வீட்டின் மூலையில் ஒரு சமையலறை என்ற சிறுகதை"*[4] மூலம் காணலாம்.

உயிர் வாழ உணவு தேவை தான் அந்த உணவைத் தயாரிக்க ஒரு சமையலறையும் தேவை தான் ஆனால் அந்தத் தேவை பெண்கள் மீது செலுத்தும் அழுத்தமும் ஆதிக்கமும் சொல்ல முடியாது சமையலறை பெண்கள் மீது செய்யும் ஆதிக்கம் பற்றி

கூறப்படுகிறது.

ஒளியற்ற ஜன்னல் குறுகிய அந்தச் சமையலறையிலிருந்து கடலில் வசிக்கும் ஆக்டபஸ் ஐநதுவின் எண்கால்போல் ஆதிக்கக்கரங்கள் நீண்டு வளைத்துப் போட்டன கால்கள் இறுக்க இறுகக் கண்டுண்டு கிடந்தனர் ஆனந்தமாக அவை இடுப்பை இறுக்கினாலும் ஒட்டியானம் என்றும் காலைச் சுற்றினால் கொலுசு என்றும் தலையில் பட்டால் கிரீடம் என்றும் நினைத்துக் கொண்டனர் பெண்கள் நாலா புறமும் கம்பிகள் எழும்பிய உலகில் புகுந்து கொண்டு அதை ராஜ்யம் என்று நினைத்துக் அரங்கேற்றினர். இன்று மட்டன் புலவு, நாளை பூரி மசாலா என்று பூமியைத் திரும்பிப் போடும் முடிவுகள் எடுத்தனர் 'பேடி அதிகாரம்" என்று இதனைக் கடுமையாகச் சாடுகிறார் அம்பை.

சமையலறைச் சிந்தனைகளே பெண்ணின் மனத்தை ஆக்ரமித்திருப்பதால் அவளால் உலக அறிவும் விழிப்புணர்வம் பெற இயலாமல் போய்விட்டது. புதுக் கண்டங்களைக் கண்டு பிடித்திருக்கலாம் காவியம் எழுதியிருக்கலாம் குகைக்குள் ஒவியம் தீட்டியிருக்கலாம் என்று இக்கதை யில் இடம்பெறும் மீனாட்சி கதாபாத்திரத் தின் வாயிலதாக அம்பை கூறுகிறார்.

## பெண்கள் ஒதுக்கப்படுதல்

சமுதாயத்தில் ஆண் குழந்தையை வளர்ப்ப திலும் பெண் குழந்தை வளர்ப்பதிலும் வேறு பாடுகள் காணப்படுகின்றன. முதலில் பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என சொல்லி சொல்லியே வளர்க்கின்றன.

**"நீ வீட்டைப் பேணுபவள், நீ அழகு சாதனங்களுக்குள்ளானவள்,**

**நீ அடக்கமானவள், நீ தீர்மானங்களைக் கேட்டுக்**

**கொள்பவள், நீ தேவியானவள், நீ உபயோகமானவள்,**

**நீ சுகத்தைத் தருபவள், நீ தேவைக்குகாக**

**மட்டுமே வேலை செய்பவள், நீ பாதுகாக்கபட்ட**

**வேண்டியவள் நீ பெண்"[5]**

என்று பெற்றோர்களே கூறுகின்றார்கள் மேலும் பெண்களை என்னதான் படிக்க வைத்தாலும் நான்குச் சுவர்களின் இருப்பறை தான் அவர்களின் எல்லையாக வைத்து ஒடுக்கப்படுவதை சுட்டிக் காட்டு கிறது பெண் என்றாலே சமையலறைதான் அவள் இருப்பிடமாக கொண்டுள்ளனர் இவ்வாறு புகட்டி குழந்தை பருவத்திலேயே அவர்களின் இலட்சிய கனவுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறது ஆண், பெண் யாராக இருந்தாலும் அவர்களின் இலட்சியப்பாதையில் ஒருவருக்கொருவர் உதவி முன்னேற வேண்டும் சமுதாயத்தில் பெண்களின் ஏற்ற தாழ்வற்ற நிலையை உருவாக்க வேண்டும். என்ற எண்ணத்தை அம்பை தன் சிறுகதைகளில் எடுத்துரைக்கிறார்.

## பெண்ணியப் பிரச்சனைகள்

சமூகத்தில் பெண்களுக்கு உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் பல பிரச்சனைகள் நடக்கின்றன இப்பிரச்சனைகள் ஆண்களால் பெண்களுக்கு ஏற்படம் பிரச்சனைகள் பெண்களால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் உள்ளன காட்டில் ஒரு மான் இச்சிறுகதையில் பெண்ணின் பிரச்சனையை மற்றொரு பெண்ணே இழிவாக சித்தரிக்கும் நிலை உள்ளது.

"வள்ளியின் அம்மா வள்ளி அது வெறும் பொக்கை உடம்பு"[6] என்றிருந்தாள் இவ்வரி யின் மூலம் ஒரு பெண் மற்றொரு பெண்ணை ஒன்றுக்கும் உதவாத போக்கு என்ற சொல்லை பயன்படுத்தி கூறியிருப் பதன் மூலம் பூப்பெய்தாத ஒரு நிலை அந்த பெண்ணை எந்த அளவிற்கு பாதித்திருக்கும் என்பதனை ஆசிரியர் தெளிவுப்படுத்துகிறார்.

ஒரு மாலை பட்டுப்போன ஒரு பெரிய மரத்தினை தோட்டத்தில் வெட்டினார்கள் கோடாலியின் கடைசி வெட்டில்லை அது சரசரவென்று இலைகளின் ஒலியோடுமனுக் கென்று சாய்ந்தது பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. இச்சிக்கல்களோடு உடற் சிக்கல்களும் மனச்சிக்கல்கள் பலவும் ஏற்படுகின்றன இச்சிக்கல்களை யதார்த்தமான நிலையில் விளக்குவதும் அவற்றிற்கான தீர்வு களைக் காண்பதும் இவற்றை சமூகத்திற்கு எடுத்துக்காட்டுவதும் படைப்பாளர்களின் நோக்கமாக விளங்குகிறது. இவ்வகையில் அம்பையின் படைப்புகள் பெண் நிலை பற்றி ஆராய ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

## போராட்டமும் வாழ்க்கையும்

திருமணம் என்கிற பந்தத்தில் இணையும் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே சரியான புரிந்துணர்வு வேண்டும் என்பது யாருக்கும் அறிந்த ஒன்றே அதனை விட பூப்படைந்த பெண்ணிற்கும் தாயிக்கும் இடையே உள்ள புரிந்துணரவு என்பது

யாவரும் அறியாத ஒன்றே ஆகும்.

"பெண்ணாய் பிறந்திட மாதவம் செய்திட வேண்டும்"[7] என்பது சான்றோர் வாக்கு அவள் வெள்ளையாக தான் பிறக்க வேண்டும் என்று யாவரும் கூறவில்லையே தனது தங்கையை பெண்பார்க்க வருவதாக கடிதம் வந்தால் அங்கே அம்மா சென்று விடுகிறாள் தனது இரு பெண்களையும் வீட்டில் இருக்க செய்து விட்டு செல்கிறாள் இதில் ஒரு பெண் கறுப்பாக இருப்பதால் அவனது தந்தை அவளை இந்தா டீ கருப்பி?" என்று தான் கூப்பிடுவார் அந்த சமயம் அவள் பருவம் அடைந்து விடவே அவள் இதனை தன் அம்மாவிடம் சொன்னால் மகிழ்ச்சியடைவாள் என நினைத்து பல விதமான கனவுகளை காண்கிறாள் அவளது அம்மா தனது தங்கையை பெண் பார்க்க வந்தவன் பெண் கருப்பாக உள்ளது. அதனால் வேண்டா மென்று சொல்லி விடவே அவள் தனக்கும் கருப்பாக ஒரு குழந்தை உள்ளதே என்று எண்ணிக் கொண்டே மனவருத்தத்துடன் வீடு வருகிறான் இங்கே வந்த பின்தான் தெரிகிறது தனது பெண் பூப்படைந்த செய்தி உடனே அவளது மகள் அவளிடம் வந்து மகிழ்ச்சியாக கூற அதற்கு அவள்,

"உனக்கு இந்த இழவுக்கு என்னடி அவசரம்? இது வேற இனி வீட்டிற்கு ஒரு பாரம்"[8] என்கிறாள் இவள் மனமுடைந்து போகிறாள் பெண் பூப்படைந்தால் பின் திருமணம் செய்ய வேண்டும் அதற்குப் பெண் வெள்ளையாக இருக்க வேண்டும் தன் பெண் கருப்பாக உள்ளாள் என அதனை எண்ணி தாய் வேதனை அடைகிறாள் இது யாதென்றே அறியாத அந்த பிஞ்சு மனமும் வேதனைகுள்ளாகிறது இச்சிறுகதை மூலம் பெண்களின் வாழ்க்கையும் போராட்டத்தை யும் ஆசிரியர் சிறப்பாக வெளிப்படுத்து கிறார்.

## முடிவுரை

பெண்களுக்கு சமுதாயத்தில் ஏற்படக் கூடிய அவலங்களையும் ஏற்ற தாழ்வுகளையும், பெண்களின் உணர்வுகள் நசுக்கப்படுவதை யும் அம்பை தன் சிறுகதை மூலம் கூறுகிறார். பெண்ணாய் பிறந்த ஒவ்வொரு வரும் தன் கனவுகளை சாதிக்க வேண்டும் என்றும் சமுதாயத்தில் ஏற்ற இறக்கமற்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று தனது சிறுகதைகளில் பெண்ணை மையமாக வைத்து எழுதி வருகிறார்.

## சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், களவியல் பாடல் 1045
2. பாரதியை பற்றிய ஜீவ பாரதி பக்கம் – 5
3. சிறகுகள் முறியும் சிறுகதை
4. வீட்டின் மூலையில் ஒரு சமையலறை
5. புனர்
6. காட்டில் ஒரு மான்
7. புரட்சிப் பெண் பாடல்
8. அம்மா ஒரு கொலை செய்தான்

## துணைநூல் பட்டியல்

1. இரா. பிரேமா, பெண்ணியம், அணுகு முறைகள் ப.,18
2. முனைவர் ச.வே. சுப்பிரமணியன் - தொல்காப்பியம் தெளிவுரை மணிவாசக பதிப்பக்கம் சிதம்பரம்
3. பாரதியர் செல்வன் பாரதியை பற்றிய ஜீவா - NCOH2 சென்னை
4. அம்பை கதைகள் (1972-2019) காலச்சுவடு பதிப்பகம்
5. முத்துச் சிதம்பரம்.ச - பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், தமிழிப் புத்தகாலயம் சென்னை முதற்பதிப்பு 1998
6. ராஜம் கிருஷ்ணன் - இந்திய வரலாற்றில் பெண்மையும், தாகம் பதிப்பகம் சென்னை நான்காம் பதிப்பு 2006
7. இரா. பிரேமா, பெண்ணியம் தமிழ்ப் புத்தகாலயம் சென்னை இரண்டாம் பதிப்பு2001
8. சிவகாமி பரமசிவம்-பெண்களின் உரிமை கள் ஸ்ரீராம் கம்லுட்டர் பிரிண்டர்ஸ் சேலம் முதற்பதிப்பு 1993
9. சரளா ராசகோபாலன் வேதநாயகம் பெண்மையும் ஒளிர் பதிப்பகம் சென்னை முதற்பதிப்பு 1985
10. முனைவர் இரா.செல்வி- பெண்ணியச் சிந்தனை காவியா பதிப்பகம் சென்னை
11. ராஜம் கிருஷ்ணன்-காலந்தோறும் பெண் காலச்சுவடி பதிப்பகம்